## தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - கலைஞர் போல்

# மாணவர்கள் பேச்சாற்றல் பெற வேண்டும்!

## பொறியாளர் அணி பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு காசோலைகள் வழங்கி - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!





**சென்னை, ஆக. 27 -**

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில் பொறியாளர் அணி நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த பேச்சாளர்களுக்கு காசோலைகளை வழங்கி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.**

பொறியாளர் அணியின் மகத்தான முன்னெடுப்பான, பள்ளிக் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கும் பல லட்சம் மாணவர்களை ஒரே தளத்தில் இணைக்கும் `மை ரூட்ஸ்' (`My Roots') மொபைல் செயலியையும் அப்போது தொடங்கி வைத்து, பொறியாளர் அணியின் வருங்கால செயல் திட்டத்தையும் வெளியிட்டார்.

மேலும், தன் வாழ்நாள் முழுவதும் தமிழ் மக்களின் மேன்மைக்காகவும் தமிழ்நாட்டின் ஏற்றத்திற்காகவும் உழைத்த நம் முத்தமி ழறிஞர் கலைஞர் குறித்து, பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அவர்கள் எழுதிய `கலைஞர் கட்டிய தமிழ்நாடு' புத்தகத்தை வெளியிட்டு வாழ்த்திப் பேசினார்.

அப்போது அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

திருவண்ணாமலை மாவட்டம், கலைவாணர் அரங்கத்தை இரண்டு நாட்கள் குத்தகை எடுத்துக்கொண்டு வெகு சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்தி காட்டி இருக்கிறது. அதுதான் திருவண்ணாமலை மாவட்டத்தின் சிறப்பு.

### சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த்

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) மாலை இதேநேரம் பொதுப் பணித்துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் எழுதிய `கலைஞர் என்னும் தாய்' என்ற புத்தகத்தை நம் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். ஒரு மிகச் சிறப்பான நிகழ்ச்சி. அதில் கலந்துகொண்டு முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள். எல்லோரும் பாராட்டி பேசுகிறார்கள். ஆனால், ரஜினிகாந்த் அவர்கள் கிட்டத்தட்ட 45 நிமிடம் நம் தலைவரைப் பற்றியும் கலைஞரைப் பற்றியும் பாராட்டிப் பேசினார். அவர் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை மட்டும் இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர் என்ன சொன்னார் என்றால்,

### `உயிரினும் மேலான உடன்பிறப்புகள்'

``எவ்வளவோ தலைவர்கள் பிறந்தி ருக்கிறார்கள். வளர்ந்து இருக்கிறார்கள், வாழ்ந்து இருக்கிறார்கள் சாதித்து இருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே எந்த தலைவருக்கும் இப்படி ஒரு நூற்றாண்டு நிகழ்ச்சியை எந்த இயக்கமும் இதுவரை நடத்தியதும் கிடையாது. நடத்துவதற்கான வாய்ப்பும் கிடையாது.''

அந்த அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் கலைஞரின் நூற்றாண்டை வெகுசிறப்பாகக் கொண்டாடி இருக்கிறது அதற்கு என் வாழ்த்துகள். அதற்குக் காரணம் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் மட்டும் காரணம் இல்லை. அமைச்சர் பெருமக்கள் மட்டுமல்ல, கழக நிர்வாகிகள் மட்டுமல்ல, அதற்கு மிக முக்கிய காரணம் முத்தமிழறிஞர் கலைஞரின் `உயிரினும் மேலான உடன்பிறப்புகள்'தான் காரணம் என்று குறிப்பிட்டுப் பேசினார்.

அதன் தொடர்ச்சியாக, இன்றைக்கு இந்தப் பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. அண்ணன் பொன்முடி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டுச் சொன்னார். `அவருக்கு ஒரு ஏக்கம், அவர் பொறியியல் படிக்க வில்லை என்று.

எனக்கெல்லாம் அந்த ஏக்கம் இருந்ததே கிடையாது. நானெல்லாம் அதற்கான முயற்சியே எடுக்கவில்லை. நாங்கள் படிக்கும் போதெல்லாம் எம்.பி.பி.எஸ். பக்கமெல்லாம் தலைவைத்து படுக்கக் கூடாது என்று நினைப்போம்.

நேராக பி.காம் முடித்துவிட்டு, அப்படியே பிசினஸ் பார்க்க போய்விடுவோம். அண்ணன் பொன்முடி அவர்கள் பேசும்பொழுது சொன்னார். அண்ணன் தயாநிதி மாறன் அவர்களுக்கு மூத்தவர்களைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது என்று. அப்படியெல்லாம் கிடையாது.

### எல்லோருமே சமம்தான்

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தயாநிதி மாறன் அவர்கள் எனக்கு மூத்தவர்தான். எனக்கு எல்லோருமே சமம்தான். இன்னும் சொல்லப் போனால் இங்கு இருப்பதிலேயே மிகவும் சின்னவன் நான்தான். இருந்தாலும், இந்த சின்னவனுக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்த பொறியாளர் அணிக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நினைவுப் பரிசாக பசுமாடு போன்ற ஒரு பொம்மையைக் கொடுத்திருக்கிறார்கள். டெல்டா மாவட்டத்தின் அடையாளம் என்று சொன்னார்கள். உண்மையான பசு மாடு கொடுத்திருந்தால் கூட ஒரு உபயோகமாக இருந்திருக்கும். இருந்தாலும், அதற்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, பொறியாளர் அணி சார்பாக மாநில அளவில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகின்றேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்கள் இங்கு அண்ணன் கருணா அவர்கள் சொன்னதைப் போல ஒவ்வொரு அணிக்கும் மூன்று இலக்குகள் கொடுத்திருந்தார்கள். அந்த வகையில் பொறியாளர் அணிக்கு வழங்கப்பட்ட முக்கியமான பணிதான் இந்தக் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி.

### தலைசிறந்த 100 பேச்சாளர்கள்

எங்கள் இளைஞர் அணிக்கும் தலைவர் அவர்கள் கொடுத்த மூன்று முக்கிய இலக்குகளில் ஒன்று பேச்சுப் போட்டி. தலைசிறந்த 100 இளம் பேச்சாளர்களை கழகத்திற்குத் தேர்வு செய்து கொடுக்க வேண்டும் என்பது அதில் ஒரு இலக்கு. தேர்தல் பணிகள் இருந்ததால் சென்ற 10 நாட்களுக்கு முன்பு ஆரம்பித்து, சென்ற வாரம் சனி ஞாயிறு இன்றும் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பல்வேறு மாவட்டங்களில் இளைஞர் அணியின் பேச்சுப் போட்டி `என் உயிரினும் மேலான..!' என்ற தலைப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

அந்தப் போட்டியில் முதல் பரிசாக ரூபாய் ஒரு லட்சம், இரண்டாவது பரிசாக ரூபாய் 75 ஆயிரம், மூன்றாவது பரிசாக ரூபாய் 50,000 கொடுக்கிறோம். ஆனால், இந்தப் பொறியாளர் அணி நடத்துகின்ற இந்த பேச்சுப் போட்டியில் பார்த்தீர்கள் என்றால், முதலிடம் 5 லட்சம், இரண்டாவது இடம் மூன்று லட்சம், மூன்றாவது இடம் இரண்டு லட்சம். இதிலிருந்து என்ன தெரிகிறது. பொறியாளர் அணி மிகவும் வசதியான ஒரு அணி.

எங்களின் அணிக்குப் பொறுப்பாளர் துணைப் பொதுச்செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்கள். பொறியாளர் அணிக்குப் பொறுப்பாளர் அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்கள். எங்களுடைய பொறுப்பாளர் எங்களை பொறுப்பாகத்தான் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். இருந்தாலும், இங்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பேச்சு போட்டி, பரிசுத் தொகை கொடுப்பதோடு முடிவதில்லை. இந்தப் பேச்சாளர்களை கழகத்திற்கு கொண்டு வந்து அவர்களின் திறமைக்கு களம் அமைத்து கொடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு என்பதை, இந்தப் பேச்சுப் போட்டி உணர்த்த வேண்டும்.

### பொறியாளர் அணியின் செயலி

பொறியாளர் அணியின் செயலியைத் தொடங்கி வைத்து அண்ணன் எஸ்.கே.பி.கருணா அவர்கள் எழுதிய `கலைஞர் கட்டிய தமிழ்நாடு' என்ற நூலும் இங்கு வெளியிடப்பட்டது. நேற்று `கலைஞர் எனும் தாய்' இன்று `கலைஞர் கட்டிய தமிழ்நாடு'.

இந்தக் காலத்திற்கு ஏற்ற மாதிரி பேச்சாளர்களை அடையாளம் காண வேண்டும். அடுத்தடுத்த தலைமுறைப் பேச்சாளர்களை வளர்த்தெடுக்க வேண்டும் அதனால்தான் இந்தப் பேச்சு போட்டிகளை நாம் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

இந்த நேரத்தில் பொறியாளர் அணிக்கு ஒரு வேண்டுகோள். இங்கு குறிப்பிடும்போது சொன்னீர்கள், கிட்டத்தட்ட 15,000 மாணவர்கள் விண்ணப்பித்தார்கள் என்று. இளைஞர் அணி அறிவித்து கிட்டத்தட்ட 17,000 மாணவர்கள் நம் கலைஞரின் உயிரினும் மேலான பேச்சுப் போட்டிக்கும் விண்ணப்பித்தி ருக்கிறார்கள்.

இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள். நம் பக்கம் வருவதற்கு தயாராக இருக்கிறார்கள். நாம் தான் அவர்களுக்கு வழிவிட்டு அவர்களை அரவணைத்து, வழிநடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு வேண்டுகோள். வழிவிட்டு, வழிநடத்தி, கைபிடித்து கூட்டிச் செல்ல வேண்டும்.

### ஒரு வேண்டுகோள்

நேற்று சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பேசும் பொழுது எதற்கு அதிகமான கைத்தட்டல்கள் என்பதை, நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நான் சொல்லக்கூடாது. நான் சொன்னால், ஏதோ மனதில் வைத்துக் கொண்டு சொல்கிறேன் என்று நினைத்துக் கொள்வீர்கள். தொலைக்காட்சிகளில் நீங்களே பார்த்திருப்பீர்கள்.

ஒரு வேண்டுகோள், இளைஞர் அணியின் சார்பாக வரவேற்பைப் பார்த்துவிட்டு, ஒரு முடிவு செய்து இருக்கிறோம். இனிமேல் வருடா வருடம் இந்தப் பேச்சுப் போட்டியை நடத்தவேண்டும் என்று. அதே போல் பொறியாளர் அணியும் வருடா வருடம் இதை நடத்த வேண்டும். வருடா வருடம் இதே பரிசுத் தொகையை நீங்கள் கொடுக்க வேண்டும். பொறியாளர் அணிக்கும் பேச்சுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் சிலர் நினைக்கலாம்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், நம் முதலமைச்சர் தலைவர் அவர்கள் எல்லோரும் `வார்த்தைப் பொறியாளர்கள்' என்று பெருமையாகச் சொல்லலாம். அதனால்தான் பொறியாளர்கள் அணி சார்பில், கலைஞர் புகழ் பாடுகின்ற பேச்சுப் போட்டியை நடத்தியது, ஒரு பொருத்தமான நிகழ்ச்சி.

இங்கு நம் கொள்கைப் பேராசிரியர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்கள் வந்திருக்கிறார்கள். அதேபோல் எதிரி களை தன் பேச்சால் நடுங்க வைக்கின்ற கலைஞர் அவர்களின் வாயால் பாராட்டைப் பெற்ற தகதாய சூரியன் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்கள் வந்திருக்கிறார்கள்.

மூத்த அமைச்சர் அண்ணன் ராஜ கண்ணப்பன் வந்திருக்கிறார்கள். இவர்கள் முன்னால் நீங்கள் அனைவரும் பரிசு பெறுகிறீர்கள். பாராட்டப் படுகிறீர்கள் என்றால், உங்க ளுக்கு கிடைத்திருக்க கூடியது ஒரு மிகப்பெரிய பாராட்டு. ஒரு மிகப்பெரிய வாய்ப்பு.

### போட்டியின் ஒரே நோக்கம்.

எந்த இயக்கத்திலும் இல்லாத வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான் தலைவர் முதல் தொண்டர்கள் வரை பேச்சாளர்கள் அதிகமாக இருந்தார்கள். இருந்து கொண்டும் வருகிறார்கள். அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த நிகழ்ச்சியின் இந்த போட்டியின் ஒரே நோக்கம்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என நம் தலைவர்களின் பேச்சுத்திறமைக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு. அதில் ஒரு சில உதாரணங்களை மட்டும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் ஒரு பொதுக்கூட்டத்திற்காக சிவ கங்கைக்குச் செல்கிறார்கள். அந்தக் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சில பேர் இந்தக் கூட்டத்திற்கு வரக்கூடாது என்று, பழைய செருப்புகளை எடுத்து அதை தோரணமாகக் கட்டி அதை அங்கு அமைக்கிறார்கள்.

நம் திராவிட கழகத்தினர், அந்த செருப்புத் தோரணத்தை அறுத்து எறிய வேண்டும் என்று முயற்சி செய்யும் பொழுது அதைத் தடுத்து நிறுத்திய தந்தை பெரியார் அவர்கள் சொல்கிறார், ``பொதுவாக இலைகளில் பூவில் தான் தோரணம் கட்டுவார்கள். இந்த இலை பூவெல்லாம் எல்லா இடத்திலும் வெகு சுலபமாக நிறைய கிடைக்கும். ஆனால், அதை விட்டுவிட்டு நமக்காக மெனக்கெட்டு பழைய ஒத்த செருப்புகளை எல்லாம் தேடி தேடிக் கண்டுபிடித்து இந்த தோரணத்தைக் கட்டி இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை நாம் திட்டக்கூடாது. பாராட்ட வேண்டும்'' என்று சொன்னார். இதைக் கேட்ட எதிராளிகள் வெட்கித் தலைகுனிந்து போனார்கள்.

### புதுப்புது வார்த்தைகள்

அண்ணாவின் பேச்சாற்றலுக்கு உதாரணங்களைச் சொல்ல வேண்டும் என்றால், இந்த ஒரு கூட்டம் பத்தவே பத்தாது. `வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது மாதிரி', `மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' இதையெல்லாம் இப்போது இருக்கக்கூடிய மாணவர்கள் பல பேர் ஏதோ ஒரு பழைய பழமொழி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் அண்ணா அவர்கள் சொன்ன உவமைகள். உறுப்பினர், வேட்பாளர், சட்டப்பேரவை இப்படி தமிழுக்குப் புதுப்புது வார்த்தைகளைத் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

இதையெல்லாம் விட மிகப் பெரிய பெருமை தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தவர் நம் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்தப் பெயரை மாற்றுவதற்கு ஒரு கும்பல் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. நம் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் வரை அதை நடக்கவும் விட மாட்டோம். அது நடக்கவே நடக்காது.

அண்ணாவின் தம்பி கலைஞரின் பேச்சாற்றலைப் பற்றி நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டுமா? பாமர மக்களிடம் பேசும் பொழுது ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மாதிரி பேசுவார், ஆய்வாளர்களிடம் பேசும் பொழுது ஒரு ஆராய்ச்சியாளர் மாதிரி பேசுவார், அரசியலில் மட்டுமல்ல மேடைப்பேச்சிலும் கலைஞரை வெல்வதற்கு வேறு ஆளே கிடையாது.

அதனால்தான் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி ஒரு வாரத்திற்கு முன்பு 100 ரூபாய் நாணயம் வெளியிட்ட போது, அந்த நிகழ்ச்சியில் பேசும் பொழுது நம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். `நா நயமிக்க மனிதருக்கு கலைஞருக்கு இன்று நாணயம் வெளியிடப்படுவது மிகப் பொருத்தமான ஒரு விஷயம்' என்று நம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்தக் காலகட்டத்திற்குப் பொருத்தமான கலைஞரின் ஒரு உரை ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். மறைந்த லோக் ஜனசக்தி தலைவர் ராம் விலாஸ் பஸ்வான் அவர்கள் 1996 -1998ஆம் ஆண்டுகளில் ஒன்றிய ரயில்வே அமைச்சராக இருந்தார்.

அப்பொழுது ஒரு ரயில் திட்டத்தின் தொடக்க விழா நடைபெற்றது. அப்பொழுது நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல மைச்சராக இருந்தார். அந்த நிகழ்ச்சியில் பேசிய ஒன்றிய அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் அவர்கள், இந்த ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு மூன்றில் ஒரு பங்கு நிதியை ஒதுக்கும். திட்டத்திற்கான மூன்றில் இரண்டு பங்கு நிதியை மாநில அரசு அதாவது தமிழ்நாடு அரசு தான் ஏற்க வேண்டும், என்று கோரிக்கை வைத்திருந்தார்.

### இன்றைக்கும் பொருத்தம்

அடுத்துப் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிடுகிறார், ரயிலுக்கு தண்டவாளம் மிக மிக முக்கியம் குறிப்பாக, தண்டவாளத்தில் இருக்கக்கூடிய இரண்டு கம்பிகளும் ஒரே அளவில் ஒரே நீளத்திலும்தான் இருக்க வேண்டும் ஒரு கம்பி மூன்றில் ஒரு பங்கு நிலத்திற்கும், இன்னொரு கம்பி மூன்றில் இரண்டு பங்கு இருந்தால் தண்டவாளத்தில் ரயில் மட்டுமல்ல யாருமே பயணம் செய்ய முடியாது. அதே போலத்தான், நிதி ஒதுக்கீடும் மாநில அரசும் ஒன்றிய அரசும் தலா 50 சதவிகிதம் என்று சமமான நிதியை ஒரே அளவில் ஒதுக்கினால்தான் அந்தத் திட்டம் சிறப்பாக இருக்கும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார்.

28 ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞர் அவர்கள் பேசிய பேச்சு. இன்றைக்கும் தமிழ்நாட்டிற்கு பொருத்தமாக இருக்கிறது. அதற்கு உதாரணம், சென்னை மெட்ரோ ரயில் திட்டம். சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 60 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகிறது. மாநில அரசு 50 சதவிகிதமும் ஒன்றிய அரசு 50 சதவீதமும் ஒதுக்க வேண்டும். ஆனால், நம் ஒன்றிய அரசு இதுவரைக்கும் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒரு ரூபாயைக் கூட ஒதுக்கவில்லை. ஆனாலும், இந்தத் திட்டம் நின்று விடக் கூடாது என்பதற்காக உறுதியோடு நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில அரசின் நிதியிலேயே இந்தத் திட்டத்தை இன்று சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

கலைஞரின் பேச்சாற்றலை, இங்கு பரிசு பெற்ற ஒவ்வொரு மாணவரும் பெற வேண்டும் என்று எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறியாளர் அணியின் செயலாளர் அண்ணன் எஸ்.கே.பி.கருணா அவர்களை ஒரு எழுத்தாளராக எனக்கு முன்பே தெரியும். அவரின் முதல் புத்தகமான `கவர்னரின் ஹெலிகாப்டர்' என்ற புத்தகத்தைப் படித்து விட்டு, அப்பொழுதே அவரைப் பாராட்டி எனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தேன்.

### வாழ்த்துகள்

எந்த ஒரு விஷயத்தையும் எளிமையாகவும் அதே நேரத்தில் சுவாரசியமாகவும் எழுதுகின்ற ஆற்றல் அவருக்கு நிரம்ப உண்டு.

இங்கு அண்ணன் ஆ.ராசா அவர்கள் பேசும் பொழுது குறிப்பிட்டு பேசினார்கள். அவர் எந்த அர்த்தத்தில் சொன்னார் என்று எனக்கு தெரியவில்லை. விரைவில் ஒரு ஆடாத நாற்காலியை எனக்குத் தர வேண்டும் என்று. இங்கு எந்த நாற்காலியும் ஆடாத நாற்காலி கிடையாது. ஆனால், எஸ்.கே.பி.கருணா அவர்கள் மிகவும் திறமையானவர் எந்த நாற்காலியைக் கொடுத்தாலும், அதில் அவர் ஆடாமல் உட்கார்ந்து கொள்வார்.

இதற்கு எந்த அர்த்தமும் நான் சொல்லமாட்டேன். நீங்களே கண்டுபிடித்துக் கொள்ளுங்கள்.

எங்கள் இளைஞர் அணியின் சார்பாக நடத்துகின்ற சோசியல் மீடியா விழிப்புணர்வு நிகழ்ச்சி, தமிழ்நாடு முழுவதும் அவருக்குப் பயணம் செய்யக்கூடிய வாய்ப்பை கொடுத்தோம் என்று சொன்னார். நம் பயிற்சிப் பாசறை நிகழ்ச்சியிலும் தமிழ்நாடு முழுக்க அவர் பயணித்திருந்தார்.

இப்பொழுது நாங்கள் நடத்துகின்ற இளைஞர் அணியின் சார்பாக `என் உயிரினும் மேலான..!' என்ற தலைப்பில் நடத்தப்படுகின்ற பேச்சுப் போட்டியில் 30 நடுவர்களில் அவரும் ஒரு நடுவர். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

எத்தனை புத்தகங்கள் எழுதினாலும் எத்தனை பேர் எழுதினாலும், தீராத வாழ்வு முத்தமிழறிஞர் கலைஞரின் பெருவாழ்வு என்று கூறிக்கொண்டு எனது அண்ணன் எஸ்.கே.பி. கருணா அவர்கள் எழுதிய `கலைஞர் கட்டிய தமிழ்நாடு' புத்தகம் தமிழர்கள் அனைவரிடமும் சென்று சேர்ந்திட நான் விரும்புகிறேன். அவருக்கும் இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த பொறியாளர் அணியின் நிர்வாகிகளுக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் முனைவர். பொன்முடி, ராஜ கண்ணப்பன், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., பொறியாளர் அணியின் மாநில தலைவர் துரை.கி.சரவணன், மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா, சட்டமன்றத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர் சுதர்சனம், மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆர்.டி.சேகர், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டச் செயலாளர் சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜட்ரீம்ஸ் மூர்த்தி, எபினேசர், பொறியாளர் அணியின் துணைச் செயலாளர்கள் சண்முகசுந்தரம், உமாகாந்த், நரேந்திரன்,பிரதீப், பரமேஷ்குமார்,

மாநில அளவில் பொறியாளர் அணி நடத்திய பேச்சுப் போட்டியில் முதல் பரிசு வென்றுள்ள சகோதரர் சுகநிலவன், இரண்டாவது பரிசு பெற்றுள்ள சந்தோஷ், மூன்றாம் பரிசைப் பெற்றுள்ள தினேஷ் பாபு, இளை அருணா, பகுதிக் கழகச் செயலாளர்கள் மா.பா.அன்பு துரை, புழல் நாராயணன், டி.ஆர்.சண்முகசுந்தரம், மலர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.